பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 30 செவ்வாய்க்கிழமை (14 07-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 229

### புலிகளின் அதிரடித் தாக்குதல்களை அடுத்து

# படை முகாம்களை பலப்படுத்த இராணுவ மேலிடம் உத்தரவு

## முப்படைத் தளபதிகளும் கூடி ஆராய்வு

கொழும்பு, ஜூலை 14

கடந்த வார இறுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய இரு பெரும் அதிரடித் தாக்குதல் சம்பவங்களை அடுத்து வடக்கு, கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களை மேலும் பலப்படுத்துமாறு படையினருக்கு இராணுவ மேலிடம் உத்தரவிட்டிருக்கிறது.

புலிகளின் இந்தத் தாக்குதல்களை அடுத்து எழுந்துள்ள நிலை குறித்து முப்படைத் தளபதிகளும் கூடி ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

கடந்த வாரத்தில், இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் புகுந்து விடுதலைப் புலிகள் நடத்திய இரு துணிகர அதிரடித் தாக்குதல்களினால் படையினர் நிலைகுலைந்திருப்பதாகக் கூறப்படுகிறது: அதனை அடுத்தே இராணுவத் தலைமைப் பீடம் முகாம்களைப் பலப்படுத்தும் உத்தரவை விடுத்திருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலையில் — முழுமையாக சிங்களக் குடியிருப்புக்கள் அமைந்துள்ள கந்தளாய் றேடியோ சிலோன் முகாம் அருகே — பெரிய இராணுவ அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தியதில் 18 படையினர் உயிரிழந்தனர்.

இதேபோன்று, இராணுவத்தினர் பலமாக இருந்த செட்டிகுளம் பகுதியில் உள்ள கட்

[3ஆம் பக்கம் பார்க்க]

## பலாலியில் உள்ளோரை சந்திக்க செஞ். குழு சென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 14

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்வையிட்டு, அவர்களின் நலன்களைக் கேட்டறிவதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் பலாலி சென்றுள்ளனர்.

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''உமண'' கப்பல் மூலம் காங்கேசன்துறை ஊடாக அவர்கள் பலாலிக்குச் சென்றனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதி தலைமையில் சென்றுள்ள இக்குழுவினர், தடுத்து வைக்கப்பட்டுள்ளோருக்கு அவர்களின் உறவினர்கள் எழுதிய கடிதங்களையும் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் தமது உறவினர்களுக்கு எழுதும் கடிதங்களை எடுத்துக் கொண்டு அவர்கள் ''குமண'' கப்பல் மூலம் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேருவர் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## பிரேமாவுக்குத் துணிச்சல் தர முருகனிடம் வேண்டுதல்!

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதி பிரேமதாசாவுக்குத் துணிச்சல் தருமாறு தமிழர் கடவுள் முருகனிடம் வரம் கேட்கப் படவுள்ளது! இதன்பொருட்டு பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் கோயிலில் நடக்கும் வேல் விழாவில் முருகனுக்கு விசேட பூசை நடத்தப்படுமாம்!!

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற குறிக்கோளை எய்துவதற்கு திரு. பிரேமதாசாவுக்கு துணிச்சலை மட்டுமன்றி மக்களின் ஆதரவையும் வேண்டி இந்தப் பூசைக்கு ஏற்பாடாகி இருக்கிறது.

வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வரவேண்டும், நாட்டு மக்கள் சமாதானமாக வாழ வேண்டும் என்பனவும் இவ்விசேட பூசையின் போது வேண்டுதல்களாக இருக்குமாம்.

கடந்த பல மாதங்களாக பௌத்த விகாரைகளுக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கப்பல் சேவையை அதிகரிக்க அரச அதிபர் கோருவார்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அத்தியவாசிய உணவுப் பொருள்களை எடுத்து வரும் பொருட்டு கப்பல் சேவையை அதிகரிக்குமாறு யாழ். அரச அதிபர் கொழும்பில் உள்ள அதிகாரிகளிடம் வலியுறுத்த உள்ளார்.

அரச அதிபர், இன்று 'குமண' மூலம் திருகோணமலை சென்று அங்கிருந்து கொழும்பு செல்வார். யாழ்ப்பாணத்துக்கு போதிய அத்தியவாசிய உணவுகளைத் தருவிக்கவும், கப்பல் சேவையை அதிகரிக்கவும் கோரி அவர் கொழும்பில் உள்ள உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார்.

இதே வேளை அரச அதி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மேலதிக கப்பல்களில் உணவுப் பொருள்கள் வரும்

மேலதிக கப்பல்களை ஏற்பாடு செய்து அவற்றின் மூலம் யாழ். மாவட்டத்திற்கு கூடுதலான உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு கொழும்பில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு கொழும்பிலிருந்து தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தரைமார்க்கமாக குடாநாட்டுக்குள் உணவுப்பொருள் எடுத்து வருவது தடைப்பட்டிருப்பதால், மேலதிக கப்பல்களில் உணவுப் பொருள்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கும்படி யாழ்ப்பாணத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கொழும்பில் உள்ள இணையத்திடம் கோரியிருந்தது.

அந்தக் கோரிக்கை தொடர்பாகவே இத்தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. (உ-5)

### ஸ்ரீலங்கா அரசு கொள்வனவு செய்த

## 6 ஜெட் விமானங்களினாலும் ராணுவப் பயன் இல்லையாம்!

லண்டன், ஜூலை 14

ஸ்ரீலங்கா அரசு தனது இராணுவ நடவடிக்கைகளுக்காக கடந்த ஆண்டு சீனாவிடமிருந்து கொள்வனவு செய்த ஆறு ஜெட் விமானங்களாலும் ஸ்ரீலங்காப் படைகளுக்கு அதிக பயன் ஏதும் இல்லையாம்.

இராணுவ ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவலை வெளியிட்டன.

வடக்கு, கிழக்கு யுத்தத்தில் இந்த ஜெட் விமானங்கள் பயன்படுத்தப்பட்டது என்றாலும், இலக்குகளைக் குறி வைத்துத் தாக்கும் விடயத்தில் அவை பயன்தரவில்லை என்றே கூறவேண்டும். விரைவான வேகத்தில் இவை புறப்படுவதால், இலக்குகள் மீது குறி தப்பாது குண்டு போட இவற்றைப் பயன்படுத்த முடியவில்லை.

இதனால் இராணுவ தாக்குதல் நடவடிக்கைகளுக்கு இவை மிகப் பயனுடையவை என்று கூற முடியாது.

இந்த விடயத்தில் தாழ்ந்து பறந்து குண்டுகளைப் போட்டு விட்டு மீண்டும் உயர்ந்து செல்லக்கூடிய பயணிகள் விமானங்களே இராணுவத்தின் முக்கிய தாக்குதல் கருவிகளாக இருக்கின்றன.

என்றாலும்—

ஸ்ரீலங்கா கொள்வனவு செய்துள்ள ஜெட் விமானங்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### இராணுவத்தின் காலாட் படைக்கு

## டாங்கிகளுடன் இணைந்து யுத்தம் புரிய கடும் பயிற்சி!

லண்டன், ஜூலை 14

இலங்கை இராணுவ வரலாற்றின் முதல் தடவையாக கவச வாகனத் தொடர்களுக்கு அருகே நின்று சண்டையிட காலாட் படையினருக்கு கடும் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது.

செக்கோஸ்லேவாக்கியாவிடமிருந்து கொள்வனவு செய்த — ரி55 ரக — கவச வாகனங்களுக்கு [டாங்கி] பக்கத்தில் நின்று யுத்தம் புரிய காலாட் படையினருக்கு இவ்வாண்டின் ஆரம்பமாதங்களில் கடும் பயிற்சி வழங்கப்பட்டது.

இவ்வாறு வழங்கப்பட்ட கடும் பயிற்சியின் பின்னரே அவர்கள் ''பலவேகய - 2'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

செக்கோஸ்லேவாக்கியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 27 கவசவாகனங்களில் [டாங்கிகள்] பலவும் இந்நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. தெரிவித்தது. [உ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, ஜூலை 14

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்று நண்பகல் 12 மணியுடன் நீக்கப்பட்டு விட்டதாக கூட்டுப் படைகள் தலைமை அலுவலகம் அறிவித்தது (உ-எ]

## தண்ணிரூற்றில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 14

முல்லைத்தீவு முகாமில் உள்ள படையினரும், அலம்பில் நிலை கொண்டுள்ள படையினரும் தண்ணிரூற்றுப் பகுதி நோக்கி கடந்த இருதினங்களாக கடும் ஷெல் தாக்குதலை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல்களை அடுத்து அப்பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்த ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து செல்வதாகவும் தெரியவருகிறது. [உ-3]

## ஆனையிறவில் ஷெல் தாக்குதல்

தென்மராட்சி, ஜூலை 14

ஆனையிறவு முகாமிலிருந்து நேற்றிரவு நேற்றும் நண்பகலும் ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

மாசார், சோரன்பற்று, புதுக்காடு, இயக்கச்சி ஆகிய பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. (உ-117]

## அடுத்த மாதம் மன்னார் முகாம் செயற்படும்

மன்னாரில் தச்சனார்மருதமடு பகுதியில் அமைக்கப்பட்டு வரும் அகதி முகாம் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் செயல்படவிருக்கிறது.

தமிழகத்தில் இருந்து திரும்பும் 650 குடும்பங்கள் முதல் கட்டமாக இங்கு தங்குவதற்கு வசதி செய்யப்படவிருக்கிறது.

ஐ.நா. அகதிகள் தூதரகம் இந்த முகாமை அமைத்துள்ளது. [உ-3]

### நேற்று தேர்தல் முடிவு:

## புதிய இந்திய ஜனாதிபதி 24 ஆம் திகதி பதவியேற்பு

புதுடில்லி, ஜூலை 14

இந்தியாவின் ஒன்பதாவது ஜனாதிபதி எதிர்வரும் 25 ஆம் திகதி பதவி ஏற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 24 ஆம் திகதியுடன் தற்போதைய ஜனாதிபதி இராமசாமி வெங்கட்ராமனின் பதவிக்காலம் முடிவடைகின்றது.

ஒன்பதாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நேற்று புதுடில்லியிலும் ஏனைய மாநிலங்களின் தலைநகரங்களிலும் நடைபெற்று முடிந்தது.

வாக்குகள் எண்ணப்படுவது எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு புதுடில்லி நாடாளுமன்றக் கட்டடத்தில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

### யாழ். குடா நாட்டில்

## தன் நிலைகளை ராணுவம் காப்பாற்றுவது சந்தேகமே!

''பலவேகய 2'' இராணுவ நடவடிக்கை பூர்த்தியடைந்திருப்பதாக ஸ்ரீலங்கா இராணுவத் தலைமைப்பீடம் அறிவித்திருந்தாலும் —

குடாநாட்டில் தாம் முன்னேறிய பகுதிகளில் உள்ள தனது நிலைகளை இராணுவத்தினால் தொடர்ந்து காப்பாற்றி வைத்திருக்க முடியுமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

— இப்படி கொழும்புப் பத்திரிகை வட்டாரங்கள் தெரிவித்ததாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது [உ-10]

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

இயந்திர இயக்குனர் வேலை தெரிந்தவர்களும், அச்சுக் கோர்க்கத் தெரிந்தவர்களும் நேரில் வரவும். வேதனம்: ரூ. 2,000 முதல் ரூ. 2,500 வரை. ஏ.எஸ்.ஜே. பிரின்ரிங் வேக்ஸ், மல்லாகம். (4910)

### மணப்பெண் தேவை

சிலாபத்தில் கடமையாற்றும் இந்து மத, 31 வயது, 5அடி 3 அங்குல உயரமுடைய எம். பி பி எஸ் டாக்டருக்கு பெற்றோர் மணப்பெண் தேடுகின்றனர். முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ கதிர்காமநாதன், மீசாலை மேற்கு மீசாலை [21749]

### மணமகள் தேவை

வயது 32, M Sc. Agriculture, மூலம், செவ்வாய் இல்லை கனடா பிரஜா உரிமை உள்ளவர். 24 - 27 வயதுக்கு இடைப்பட்ட அழகிய, படித்த பெண் தேவை. G. குணரத்தினம், இல 169, பலாலி வீதி, யாழ்ப்பாணம். [21751]

வயது 30, B. Sc (Hons) கம்பியூட்டர் என்ஜினியர் U.K பிரஜா உரிமை, உத்தராடம் 3, உதயத்தில் செவ்வாய், ராகு, அழகிய, படித்த பெண் தேவை. G. குணரத்தினம், இல. 169 பலாலி வீதி, யாழ்ப்பாணம். [21752]

### இலவச திருமண சேவை

27 வயது ரோகிணி, செவ்வாய் 4, கொழும்பில் தனியார் துறையில் நிரந்தர உத்தியோகம் புரிபவருக்கு ஆசிரியை மணமகன் தேவை. ஞாயிறு தினம் காலைகளில் சந்திக்கலாம். து விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி. [5154]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடை பெறுமா? கேட்டுப் பாருங்களேன்! ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம் அனைத்துக்கும் நாடுங்கள். தினமும் காலை 8மணி முதல் 12 மணி வரை ந. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. கிளை — 249 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் [நேரம் பிற்பகல் 2 முதல் 6வரை] [21687]

### தட்டச்சு - றோணியோ

சகல விதமான தமிழ் — ஆங்கில தட்டச்சு, ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோணியோ வேலைகளை உங்கள் விருப்பம் போல் தரமான முறையில் செய்து கொள்ள நாடுங்கள் ''அருண் மார்க்கெட்டிங் அன்ட் அட்வேடைசிங் சேவிசஸ்'', இல.15, 2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (சி-2909)

### வெளிவந்துவிட்டது

வரலாறும், சமூகக்கல்வியும் ஆண்டு 10 துணை மீட்டலுக்கான வினா-விடை. ஆக்கம்: க சந்திரசேகரம் ஏவிநியோகஸ்தர்கள் ஸ்ரீ லங்கா புத்தகசாலை, இல. 234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம் விலை ரூபா 33/- மட்டுமே வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு [சி 2578]

### புலமைப்பரிசில்

வினா - விடை 1992 உட்பட விற்பனையாகிறது. மேலும் இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு, G C E. (O/L)வினா - விடை, G.C.E. (A/L) வினா - விடை விற்பனையாகிறது: அறிவகம் புத்தகசாலை. [சி-2919]

### O/L - 92 வினாத்தாள்

O/L Dec. 92 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். பரீட்சைப் பகுதி: Bond Institutes, யாழ்ப்பாணம். [5153]

### பயிற்சிப் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [5152]

### O/L கணிதம்

மாணவர்கள் தாமாகவே கற்றலை மேற்கொள்ளச் சிறந்த கணித நூல்கள் ஆசிரியர் சச்சிதானந்தனின் உதவி நூல் வரிசைகளாகும். மடக்கைகள், விருத்திகள், புள்ளி விபரவியல், திரிகோண கணிதம் ஒவ்வொன்றும் ரூபா 20/-. பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா மற்றும் புத்தகசாலைகளில். [4914]

### மக்கள் மயம்

கொழும்பு, ஜூலை 14
கந்தளாய், ஹிங்குரான, செவனகல ஆகிய இடங்களில் உள்ள சீனித் தொழிற்சாலைகள் மக்கள் மயப்படுத்தப்பட உள்ளன.

இத் தொழிற்சாலைகளின் பங்குகளில் 30 சதவீதமானவை பொதுமக்களுக்கும், 60 சதவீதமானவை கம்பெனிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. எஞ்சிய 10 சதவீத பங்குகள் அத் தொழிற்சாலைகளில் பணி புரியும் ஊழியர்களிடையே பகிர்ந்து வழங்கப்படும். (த-எ)

## ''சிக்கன முறையில் சிறந்த போஷாக்கு'' கண்காட்சி

இடம்:
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.
காலம்: 17-07-1992 வெள்ளிக்கிழமை
18-07-1992 சனிக்கிழமை
நேரம்: காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை

மில்க்வைற் காட்சிச் சாலைக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் சிறுடைகளையும் ஏனைய உடைகளையும் சிறாகவும் துரிதமாகவும் சலவை செய்ய மில்க்வைற் சலவைத்தூள் 300 கிராம் கொண்ட போதித்தல் சகாயவிலை ரூபா 35/- மட்டும். வாங்குவோர்களுக்குப் போஷாக்கு மிக்க அகத்திக்கன்று கீரை விதை அன்பளிப்பு

மில்க்வைற்.
யாழ்ப்பாணம்.
[சி 2920]

## யாழ். மத்திய கல்லூரியின் நிறுவுனர் நாள் பற்றி ஆராய்ந்து நிர்ணயிப்பதற்கான குழு

மேற்படி விடயம் சார்பாகத் தகவல்களைக் கொடுக்கக் கூடியவர்களிடமிருந்து பொருத்தமான ஆதாரங்களைத் திரட்டுவதற்கு மேற்படி குழு தீர்மானித்துள்ளது. எனவே தக்க ஆவணங்களுடன் முறையான தகவல்களை 31 08-1992இற்கு முன்னர் திரு. அ லொ. செல்வரெத்தினம், 874, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுத்து மூலம் அனுப்பி வைக்கவும்.

காரியதரிசி,
பழைய மாணவர் சங்கம்,
யாழ். மத்திய கல்லூரி.
[சி-2579]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 27 — 03 — 1923
மறைவு: 14 — 06 — 1992

அமரர்
### தம்பிப்பிள்ளை கனகரத்தினம்

திதி: 14 — 07 — 1992

பாசமும், நேசமும் மிக்க அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அந்தியேட்டியும், சபிண்டீகரணக் கிரியைகளும் இன்று [14 - 7 1992] அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.
(5149)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 01 — 04 — 1942
மறைவு: 14 — 06 — 1992

### அமரர் சிதம்பரம் நடேசன்

(வாகன சாரதி, காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை - சுற்றுலாப்பகுதி)

எல்லோர்க்கும் இனியவரே!
எம் இல்லத்தின் ஒளிவிளக்கே!
கள்ளமில்லா வெள்ளை நெஞ்சே!
கலங்கி நாம் தவிக்க இங்கே
கணப்பொழுதில் சென்ற தெங்கே!
மின்னலில்லை முழக்கமில்லை
புயலுடன் தான் பெருமழையோ
ஊர் ஊராய் உறவுகள் நாம் அலைந்தாலும்-
நெஞ்சமதில்,
உன் நினைவு நீங்காமல் இருக்குதையா!
நித்தம் தான் அழுதாலு புரண்டாலும்,
நிலைத்தவர் யார் இந்நானிலத்தில்.

நின் ஆத்மா சாந்திக்கு
இறைஞ்சுகின்றோம் இறைவனை.
உன் பிரிவால் அயருறும்:

தாய், மனைவி, மகள், அண்ணன்மார்,
அக்காமார், தம்பிமார், அத்தான்மார், மச்சான்மார்,
பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் உறவினர்கள்.

மாவை,
வலிகாமம், தெல்லிப்பழை.
(21711)

## செட்டிகுளம் தாக்குதல்; விசாரணை நடத்த உத்தரவு!

செட்டிகுளம் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தாக்கி 50க்கு அதிகமான படையினரைக் கொன்று, அம் முகாமை அழித்த சம்பவம் பற்றி உயர் நிலை விசாரணை ஒன்று நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

இதே வேளை—
வட மத்திய மாகாண எல்லைப் புறங்களில் இராணுவ பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துமாறு இராணுவத்துக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது. (த-எ)

திருநாடலங்கரித்த
## திங்கள் நினைவு அஞ்சலி



அறிவுலகு: 09 — 12 — 1931
அன்புலகு: 14 — 06 — 1992

### அமரர் அன்றூ லியோன்சியஸ்

(இளைப்பாறிய அதிபர்)

அன்புமுகம் புன்சிரிப்பு அப்பா உங்கள்
அரவணைப்பும் கலகலப்பும் மறக்கப்போமோ?
என்புருகி எம்மையெல்லாம் வளர்த்த தாகம்
எண்ணியெண்ணிக் கண்ணீரைச் சொரிகின்றோமே
என் துணைவி மக்களென்ற பாசம் யாவும்
எப்படித்தான் மறந்தோடிப் பறந்தீர் ஐயா!
பொன்னுலகில் இறைவனடி மலரில் நாளும்
புது வாழ்வில் பேரின்பம் பொங்கக் காண்பீர்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்.

146, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
[21743]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் தர்மதுரை அசோக்குமார்

[பொறியியல்துறை மாணவன் - உயர்கல்லூரி, நோர்வே]

தோற்றம்: 17-11-1967
மறைவு: 14-07-1990

திதி: 14 — 07 — 1992

உன்னைத் தாலாட்டி சீராட்டி
வளர்த்தெடுத்த அம்மா, சகோதரர்கள்
இங்கிருக்க என் செல்வமே! எங்களைத்
தவிக்கவிட்டு எங்குதான்
ஓடி மறைந்தாயோ நீ!
ஆண்டுகள் தான் இரண்டோடி
மறைந்தாலும் உன்னை நினையாத
நாள் ஏது? அசோக்கே! எம்
துயர் தீரும் நாள் ஏது? அசோக்கே!

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

— குடும்பத்தினர்.

முள்ளானை,
இளவாலை,
[21738]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தண்டனை வேண்டும்

அத்தியாவசிய உணவுப் பொருள்களை அதிக விலைகளில் விற்கும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறு நடவடிக்கை எடுத்த பின்னர் திரும்பவும் பதுக்கல், கொள்ளை லாபம் போன்ற தீய செயல்களில் ஈடுபடும் வர்த்தகர்களின் பொருள்கள் பறிமுதல் செய்யப்படும். அவை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். அத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் நீண்ட காலத்துக்குத் தடுத்து வைக்கப்படுவர்

தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் விடுத்துள்ள செய்தி ஒன்றில் இவ்வாறு அறிவித்துள்ளார்

யுத்த காலத்திலும் ஏனைய அரசியல் நெருக்கடிகள் மிகுந்த காலங்களிலும் உணவு மற்றும் பாவனைப் பொருள்கள் போதிய அளவில் கிடைக்காமற் போவதுண்டு.

இதனைவிடவும் ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழர்கள் மீது பொருளாதாரத் தடையையும் விதித்திருக்கிறது என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும். ஆகவே உணவுப் பொருள் மற்றும் பாவனைப் பொருள்களுக்குப் பற்றாக்குறை ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

உணவு மற்றும் பாவனைப் பொருள்களில் தன்னிறைவு காணக் கூடிய அளவுக்கு அவற்றை நாமே உற்பத்தி செய்து கொள்வது தான் பற்றாக்குறையும் தட்டுப்பாடும் ஏற்படாமல் தடுப்பதற்கான ஒரே மார்க்கம்.

அத்தகைய ஒரு சுயசார்புப் பொருளாதார நிலையை உடனடியாக எட்டிவிட முடியும் என்று எதிர்பார்க்க முடியாது.

தமிழர்களுக்கெனத் தனி அரசு ஒன்று அமைத்து தமிழ்ப் பூமி அபிவிருத்தி செய்யப்படும் வரை பற்றாக்குறை அதனால் ஏற்படும் தட்டுப்பாடு என்பன எமக்க நிரந்தரமானவையாகவே இருக்கப் போகின்றன. ஆகையால், அத்தகைய சூழ்நிலையில் மக்கள் பாதிப்புறாமல் இருப்பதற்கு வர்த்தகர்களின் பெருமனதும், நியாய சிந்தையும், நேசப்பற்றும், மக்கள் நேயமும் மிகவும் அவசியமாகும்.

தாங்களும் இந்தச் சமூகத்தின் அங்கம் என்பதை வர்த்தகர்கள் உணரவேண்டும் பொருளாதார, வர்த்தகத் தள நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களை பெரும்பணம் சம்பாதிக்கப் பயன்படுத்தக்கூடாது.

தடைகள், கஷ்டங்களின் மத்தியிலும் தாம் பண்டங்களைக் கொண்டுவந்து சேர்ப்பதால் அல்லது அவற்றை வாங்கிச் சேகரித்துக்கொள்ள பணவசதி இருப்பதால் மக்களைச் சூறையாடுவதற்குத் தங்களுக்கு உரிமை உண்டு என்று வர்த்தகர்கள் நினைக்கக்கூடாது.

சமூகப் பொறுப்புடன் நடப்பதற்குப் பதிலாக வர்த்தகர்கள் சமூக விரோதம் புரியத் தொடங்கினால் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. சமூகத்துக்கு - மக்களுக்கு - உதவ வேண்டிய கடமையுள்ளவர்கள் அதற்கு விரோதிகளாக மாறினால் தேசத்துரோகிகளாகவே கருதப்படவேண்டும்.

எனவே காவல்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ள தண்டனைகள் பதுக்கல், கொள்ளை லாப வியாபாரிகளுக்கு வழங்கப் பொருத்தமானவையே. நீண்ட காலமாக மக்களை பாதிக்கும் ஒரு விவகாரத்தில் சிறிய தண்டனைகளால் குற்றவாளிகள் திருந்த மாட்டார்கள் கடும் தண்டனைகள், அவர்களைத் தனிப்பட்டமுறையில் ஆழமாகப் பாதிக்கக்கூடிய தண்டனைகளே தேவை.

---

இராணுவ நடவடிக்கைகளினால்

# சேதமடைந்த வீடுகளை புனரமைக்க நடவடிக்கை

உடுவில், ஜூலை 14

யாழ் மாவட்டத்தில் வலிகாமக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களின் வீடுகள் இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமாக்கப்பட்டிருப்பின் அவற்றை புனரமைத்துக் கொடுப்பது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சனசமூக நிலையங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள் மற்றும் பொது அமைப்புகள் ஊடாக இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இத் திட்டத்தை நிறைவேற்றும் பணியில் ஈடுபட பல தரப்பையும் சேர்ந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

தெரிவு செய்யப்பட்ட 195 குடும்பங்களுக்கு, வருட இறுதிக்குள் வீடுகளை அமைத்துக் கொள்ள தேசிய வீடமைப்புச் சபையும் நிதி உதவி வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிதியுடன் வீடுகளைக் கட்டிக் கொள்ள அல்லது புனரமைக்க ஏற்படும் மேலதிக செலவுகள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களினால் சிரமதானப் பணி மூலம் ஈடு செய்யப்படும். [த-152]

## ஜி. சி. ஈ. பரீட்சை ஆகஸ்டில் திட்டமிட்டபடி நடைபெறும்

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாட்டில் ஆயிரத்து 110 பரீட்சை நிலையங்களில் திட்டமிட்டபடி ஜி சி ஈ உயர் தரத் தராதரப்பத்திரப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது.

பெலவத்தை, பூஸா மற்றும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தினகரன் செய்தி வெளியிட்டுள்ளது (த-எ)

## வேதனைகளின் பின்னால் தான் தமிழர்களுக்கு வாழ்வு உண்டு

### "நெய்தல்" ஒலிப்பதிவு நாடா வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 14

கடற்புலிகள் அமைப்பு குறுகிய காலத்தில் பல சாதனைகளைப் படைத்துள்ளது. அந்த சாதனைகளின் பின்னால் எல்லாம் வேதனைகள் நிறைந்துள்ளன. ஆனால் வேதனைகளுக்குப் பின்னால் தான் தமிழ் மக்களுக்கு வாழ்வு இருக்கிறது

இப்படிக் கூறினார் கவிஞர் மு.வே யோ. வாஞ்சிநாதன்.

கடற்புலிகளின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய "நெய்தல்" ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டு நிகழ்ச்சி கடந்த வெள்ளி அன்று யாழ் பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே கவிஞர் வாஞ்சிநாதன் முன்கண்டவாறு சொன்னார்.

திரு. மறவன் தலைமையில் நடந்த வைபவத்தை கடற்கரும்புலி மாவீரன் கொலின்னின் பெற்றோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

வரவேற்புரையை கடற்புலிகளின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி நளாயினியும், வெளியீட்டுரையை கவிஞர் புதுவை இரத்தினதுரையும் வழங்கினர்.

ஒலிப்பதிவு நாடாவின் முதற்பிரதியை கல்வித்துறைப் பொறுப்பாளர் திரு. யோகரட்ணம் யோகியிடமிருந்து கடற் புலிகளின் விசேட தளபதி திரு. சூசை பெற்றுக் கொண்டார்.

வண. பிதா யோசப் ஜீரா. பிரான்சிஸ் ஆசியுரை வழங்கினார். திரு. பொன் சுந்தரலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர்.

'நெய்தல்' ஒலிப்பதிவு நாடாவை உருவாக்கிய சகல கலைஞர்களும் வைபவத்தில் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். [த-5]

## 500 குடும்பங்கள் இடம் பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 14

டச்சுவயல் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சங்கரத்தை கோயில் வயல் இலக்கச்சி, மாசார் ஆகிய பகுதிகளில் இருந்து சுமார் 500 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

இவர்கள் தற்சமயம் சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவிலும், பளைப் பகுதியிலும் தங்கியுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன

மக்கள் இடம் பெயர்வு தொடர்பாக கொழும்புக்கு தகவல் அனுப்பப்பட்டிருப்பதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## அம்பாறையில் 8 புதிய பாடசாலைகள்

வடக்கு — கிழக்கு மாகாண கல்வி, விளையாட்டு அமைச்சினால், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் புதிதாக எட்டுப் பாடசாலைகள் அமைக்கப்பட உள்ளன.

மாகாண அமைச்சுச் செயலாளர் எம். எச். ஏ. மொஹிதீன் இதனைத் தெரிவித்தார். (த-எ)

## மனைவி-மகனுக்கு நஞ்சூட்டி குடும்பஸ்தரும் தற்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 14

தேச விரோதிகள் கப்பம் கேட்டதால் குடும்பஸ்தர் ஒருவர் தனது மனைவிக்கும் மகனுக்கும் நஞ்சூட்டிவிட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் கடந்த வியாழன்று இப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது.

தாம் கேட்ட தொகைப் பணத்தை வழங்கத் தவறினால் அவரது மகன் கொல்லப்படுவார் என தேசவிரோதிகள் சிலர் பயமுறுத்தியதை அடுத்தே பிரஸ்தாப குடும்பஸ்தர் மேற்படி விபரீத செயலில் இறங்கினார் என்று கூறப்படுகிறது

## இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், ஜூலை 14

திவ்யஜீவன சங்கத்தின் ஸ்தாபகரான சுவாமி ஸ்ரீ சிவானந்த மகரிஷி சமாதி அடைந்த 29 ஆவது ஆண்டு புண்ணிய திதியை முன்னிட்டு யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இன்று செவ்வாய் மாலை 4.30 மணிக்கு குரு பூர்ணிமா விழாவும் சர்வமத மதத் தலைவர்கள் பிரார்த்தனையும் அருளுரைகளும் இடம்பெறும்.

சுவாமி ஸ்ரீ சிவானந்த மகரிஷியின் புண்ணிய திதி இம் மாதம் 24 ஆம் திகதி காலை 9 00 மணிக்கு யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இன்று முதல் 24 ஆம் திகதி வரை தினமும் பிரார்த்தனை, பூசை, பஜனை ஆகியவை இடம்பெற ஏற்பாடாகி உள்ளது.

இன்றைய வைபவத்தில் நல்லை, ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும், கலாநிதி என் எம். சவிரிமுத்து அடிகளும் உரை நிகழ்த்துவார்கள். [இ]

★ ★ ★

யாழ்ப்பாணம் கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் உள்ள ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்தமடப் பரிபாலன சபையின் 18 ஆவது மாதாந்த சொற்பொழிவு பூரண தினமான இன்று பிற்பகல் 3.30 மணிக்கு வேதாந்த மடத்தில் நடைபெறும்.

ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் "சிவஞான போதம்" என்ற தலைப்பில் பண்டிதர் சோ. தியாகராஜபிள்ளை சொற்பொழிவாற்றுவார்.

★ ★ ★

1992 ஆகஸ்டில் நடைபெற இருக்கும் ஜி. சி ஈ உயர்தரப் பரீட்சையில் கிறிஸ்தவ பாடத்துக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளை தயார் செய்வதற்கான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை சென். பத்திரிக்ஸ் கல்லூரியின் தமிழ் மண்டபத்தில் நடைபெறும் இளைஞர் உருவாக்கல் இயக்கத்தின் ஏற்பாட்டில், யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறைப் பிரிவின் விரிவுரையாளர் கலாநிதி அருட் திரு. ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் இக் கருத்தரங்கை நடத்துவர். [உ]

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைத் தலைமையகத்தின் வலிகாமம் வடக்குப் பிரிவுக்குரிய — அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தல் சம்பந்தமான கூட்டம் — இன்று காலை 9 30 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெறும்.

★ ★ ★

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

## மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்துக்கு புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான தகுதிகாண் பரீட்சை நாளை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். [உ]

## குழாய் கிணறு

யாழ். புனித மரியாள் பேராலயப் பகுதி மக்களின் குடி தண்ணீர் பிரச்சினையைப் போக்கும் முகமாக யாழ். மாநகரசபை இப் பகுதியில் குழாய்க் கிணறு ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது [த-30]

## பெயர்ப் பட்டியல் தயாரிப்பு

நவாலி, ஜூலை 14

யாழ். மாவட்டத்திலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் வலிந்துதவு சமூக சேவை ஒருங்கிணைப்புகளின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கையில் யாழ். சமூக சேவைத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது

இது சம்பந்தமாக மேற்படி ஸ்தாபனங்களின் விவரங்களை திரட்டுவதற்காகவும், பதிவு செய்யப்படாதவற்றை பதிவு செய்வதற்குமே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

## வெளியேற்ற உத்தரவு

இந்தியாவில் உரிய பயண ஆவணங்கள் இன்றி குறித்த காலத்திற்கு மேல் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களைக் கண்டறிந்து அவர்களை வெளியேற்றும்படி மாநில அரசுகளுக்கு புதுடில்லி மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

[த-எ]

## ஏனைய பகுதிகளில் 24 மாணவருக்கு ஓர் ஆசிரியர்; வடக்கு - கிழக்கில் 47 மாணவருக்கு ஓர் ஆசிரியர்!

யாழ்ப்பாணம், ஜூலை 14

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது, 1991இல் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் எண்ணிக்கை பெரிதும் வீழ்ச்சி அடைந்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் சுட்டிக்காட்டி உள்ளது.

வடக்கு-கிழக்கில் நிலவும் யுத்த நிலை காரணமாக அங்கு பணிபுரிந்த சுமார் 2 000 ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுள்ளனர். இதனால் தமிழர் ஆசிரியரின் எண்ணிக்கை சுமார் பத்து வீதத்தால் குறைந்தது —

அரசினால் அறிவிக்கப்பட்ட ஊக்குவிப்புத் திட்டத்தினால், 23 மாணவருக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை மாறி 24 மாணவருக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை பொதுவாக ஏற்பட்டுள்ளது —

ஆனால் வடக்கு — கிழக்கில் 47 மாணவருக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை உருவாகியுள்ளது. பெரும் எண்ணிக்கையான தமிழர் ஆசிரியர் ஓய்வு பெற்றதும் மற்றும் பலர் வெளிமாகாணங்களுக்கு இடம் பெயர்ந்ததுமே இந்த வீழ்ச்சிக்குக் காரணம். இலங்கையின் மாணவர் — ஆசிரியர் வீதம் இந்தளவுக்கு மோசமாக வீழ்ச்சி அடைந்துள்ளது இதுவே முதற் தடவையாகும் — இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

இலங்கை தொடர்பான

## இந்தியாவின் இரட்டைக் கொள்கை: முன்னாள் அதிகாரி விளக்கம்

இலங்கை சம்பந்தமான இந்தியாவின் இரட்டைக் கொள்கை தவறாக வழிநடத்தப்பட்டது குறித்து பிரதமராக இருந்தபோது ராஜீவ் காந்தி அதிருப்தி அடைந்து இருந்தார்.

இவ்வாறு தமிழகத்தின் முன்னாள் பொலீஸ் ஆணையாளர் மோகன்தாஸ் விளக்கமளித்துள்ளார்.

'இலங்கையின் ஒருமைப்பாடு பேணப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அதே வேளை இந்திய மண்ணில் இலங்கைப் போராளிகளுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இந்த இரட்டைப் பாத்திரத்தை வகிக்கும் தற்கொலைக் கொள்கையைக் கடைப்பிடிக்கத்தான் வழி நடத்தப்பட்டார் என்று ராஜீவ் அதிருப்தி அடைந்திருந்தார்.

இந்த இரட்டைப் பாத்திரத்தை ராஜீவ் மாற்றி அமைக்க முற்பட்டபோது அவரது ஆலோசகர்களாலும் மற்றும் உளவு நிறுவனங்களாலும் அதற்குத் தடை விதிக்கப்பட்டது' — என்றும் திரு. மோகன்தாஸ் கூறினார்.

கொழும்பு தினகரன் இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது. [த-எ]

## படை முகாம்களை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுப்பெத்த முகாம் கடந்த சனியன்று விடுதலைப் புலிகளால் முற்றாகத் தாக்கப்பட்டது; பேரிழப்புக்களை படையினர் சந்தித்தனர்.

அடுத்தடுத்து நடத்தப்பட்ட இந்த இரண்டு அதிரடித் தாக்குதல்களிலும் இராணுவத் தரப்பினர் நிலை குலைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே சீனச் சகடை விமானம் ஒன்றும் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதும். அரசுக்கு அதிர்ச்சியை அளித்திருக்கிறது

இச்சம்பவங்களை அடுத்து கடந்த இரு தினங்களாக ஸ்ரீலங்காவின் முப்படைத் தளபதிகளும் ஒன்று கூடி நிலைமையைத் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [உ-3]

## 6 ஜெட் விமானங்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் எதிரியிடம் பயத்தை ஏற்படுத்தவும் —

வெளிநாடுகள் இலங்கையின் மீது ஆக்கிரமிப்பு எண்ணத்தை உருவாக்குவதைத் தடுக்கவும் பயன்படும்.

இவ்வாறு அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி நிலைமையை அனுசரித்து நடக்க வேண்டும்

## அதிபர்களுக்கு பணிப்பாளர் அறிவுறுத்து

தற்போதைய நெருக்கடி நிலையில் பாடசாலைகளை இணைத்து நடத்தவும் ஆசிரிய வளங்களைப் பகிர்ந்து கொள்ளவும் அதிபர்கள் தயாராக இருக்க வேண்டும். அதே வேளை ஒவ்வொரு பாடசாலையினதும் தனித்துவத்தைப் பேணவும் வேண்டும்.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பி. சண்முகராசாவின் பிரிவுபசார வைபவம் கடந்த சனிக்கிழமை பண்டத்தரிப்பு கோட்ட அலுவலகத்தில் நடந்தது. அதில் கலந்து கொண்ட அதிபர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் இடம்பெயர்ந்த மாணவர்களிடம் பலவந்தமாக நிதி வசூலிப்புகளைச் செய்யக் கூடாது என்றும் அதிபர்களை அவர் வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

பாடசாலையின் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆசிரியர்களுடன் மாதாந்தக் கலந்துரையாடல்களை தவறாது நடத்துதல் அவசியம் என்றும்— அவர் அப்போது தெரிவித்தார். (ஒ-5)

## உற்சவம்

பளை தம்பசாமம் செருக்கன் சாட்டி முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று நடைபெறும். [உ-27]

## நாளை

யாழ்ப்பாணம் தெற்குக் கொத்தனி முதன்மைப் பாடசாலையான சென். சாள்ஸ் மகாவித்தியாலய ஆங்கில தின விழா நாளை புதன்கிழமை காலை நடைபெறும். முதன்மை விருந்தினராக திரு. டி. ஆர். அருமைநாயகம் உதவி கல்விப்பணிப்பாளர் — (ஆங்கிலம்), கௌரவ விருந்தினராக யாழ். பேராலய பங்குத் தந்தை வண. ஜெயநேசன் அடிகளார் ஆகியோர் கலந்து கொள்வர். (த எ)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

வைத்திய சிகிச்சை பெறுவதற்காகக் கொழும்பு செல்வதற்குப் பதிவு செய்த நோயாளர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஏழு மணிக்கு வைத்தியசாலைக்குச் சமுகம் கொடுக்க வேண்டும் என்று யாழ். போதனா ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நோயாளர்கள் தமக்குத் தேவையான உணவு தண்ணீர் மற்றும் மருந்துகளையும் எடுத்து வரவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். [அ-15]

## ஒத்திவைப்பு

யாழ். பல்கலைக் கழக அணிக்கும் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இன்று மாலை யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற இருந்த கண்காட்சி உதைபந்தாட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக பல்கலைக் கழக உதைபந்தாட்ட அணியின் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்குப் பதிலாக இன்று மாலை 4 மணிக்கு பல்கலைக் கழக மைதானத்தில் பல்கலைக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் அணி சிநேகபூர்வமான ஆட்டம் ஒன்றில் மோதும். [உ]

## இன்றைய ஆட்டங்கள்

நவாலி வளர்மதி சனசமூக நிலையம் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

அவற்றின் விவரம் வருமாறு:-

★ பி. ப. 3-00 மணி:- புங்குடுதீவு அம்பாள் வி. க. அணி எதிர் புத்தூர் சரஸ்வதி வி. க. அணி

★ மாலை 4-00 மணி:- அராலி மாவத்தை வி. க. அணி எதிர் புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வி. க அணி

## பிரேமாவுக்குத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமாதான யாத்திரை சென்ற சமாதி நிறுவனம் இப்போது முருகனிடம் வரம் கேட்டு விசேட பூசைக்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

ஆடிவேல் விழாவை முன்னிட்டு புறக்கோட்டையில் இருந்து பம்பலப்பிட்டிக்கு வந்த முருகப் பெருமான் இம்மாதம் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை வெள்ளி ரதத்தில் திரும்புவார். அதற்கு முதல் பிரேமதாசாவுக்குத் துணிச்சல் தர வேண்டி விசேட பூசை நடக்கும். [அ-10]

## கப்பல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பருடன் சேர்ந்து பயணமாகும் கல்விப் பணிப்பாளர் ஜி. சிவா. உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களை இங்கே கொண்டு வருவதற்கான ஒழுங்குகள் குறித்துப் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார்: வினாத்தாள்களை விமான மூலம் பலாலிக்கு எடுத்து வரவும் அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்குக் கொண்டு வரவும் ஒழுங்குகள் செய்து தருமாறு கல்விப் பணிப்பாளர் கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்பார். இது விடயத்தில் அரச அதிபரும் சேர்ந்து பணிபுரிவார். [அ-3]


உ

# நீர்வேலி - அருள்மிகு செல்லக்கதிர்காமசுவாமி கோயில் "ரதோற்சவ விழா"



## 15-07-92 புதன்கிழமை

மிக விமரிசையாக நடைபெறும்.

வசந்த மண்டப பூஜை காலை 8. 30 மணி

ரத ஆரோகணம் காலை 10 மணி. ரத அவரோகணம் பகல் 2 மணி

தேர்த்திருவிழாவை முன்னிட்டு விசேட மேள, நாதஸ்வரக் கச்சேரிகள் இடம்பெறும்.

உபயகாரர்:- கிருஷ்ணபிள்ளை குடும்பம், மகன்- ஆனந்தன்.

[21759]


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா ஸ்ரீதரன்

[ஸ்ரீதரன் மாஸ்டர்]

கந்தையா ஸ்ரீதரன் கனடாவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அழகம்மா தம்பதியினரின் புதல்வரும் பாலாம்பிகையின் அன்புக் கணவரும், பாலஜெனு, சகி பாலஜெனி, சௌதிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன.

தகவல்:
ந. பாலகிருஷ்ணன்

கலைவாணி மில் லேன்,
கொக்குவில் கிழக்கு. (21755)

## சபாரெத்தினம் வரதராஜா

வேலணை மேற்கு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக்கொண்டவரும், கல்வியங்காடு விநாயகர் வீதியில் தற்போது வசித்தவருமாகிய சபாரெத்தினம் வரதராஜா [வரதன்] அகாலமரணமாகிவிட்டார்.

இவர் சபாரத்தினம் இரத்தினத்தின் அன்பு மகனும், ரஞ்சித மலரின் அன்புக் கணவரும், லோகிதா, சுதர்சனா, அஜந்தன் ஆகியோரின் தந்தையாரும், கௌசலாதேவி, கமலாதேவி, கலைச்செல்வி, ராமராஜா, பத்மராஜா ஆகியோரின் சகோதரரும், சேதீஸ்வரன், இரத்தினசிங்கத்தின் மைத்துனரும், இராஜரெட்னம், இலெட்சுமிபிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், காஞ்சனமாலா, சிவகலை, சிறிஸ்கந்தராஜா, காலஞ்சென்ற யோகராஜா, மகேந்திரராஜா, ஞானகலை, ஆனந்தராஜா, நிர்மலா, அழகராஜா ஆகியோரின் மைத்துனரும், ஜெயராணி, ரஞ்சி, அனுசியா ஆகியோரின் அண்ணரும், மாலினிமணி, நடனகோமணி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 14-07-92 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சிறிஸ்கந்தராஜா

விநாயகர் வீதி,
கல்வியங்காடு [21760]

## திருமதி கற்பகவதி முத்துதம்பி

மாவிட்டபுரம் பளையைச் சேர்ந்த திருமதி கற்பகவதி முத்ததம்பி (புதவீடார்) காலமானார்.

இவர் பத்தமேனியைச் சேர்ந்த காலஞ்சென்ற மூத்ததம்பியின் (இராசா) அன்பு மனைவியும், பாலபாஸ்கரன் [யுனைற்றெட் மேர்சன்ஸ் லிமிட்டெட், கொழும்பு), காலஞ்சென்ற செல்லபூவதி, பாலசுப்பிரமணியம் (முன்னாள் நிர்வாகி, சுதந்திரன்], பாலலிங்கம் [திட்ட அமுலாக்கல் அலுவலர் உ. அ. அ. பணிமனை. உடுவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராமநாதன், இலட்சுமிப்பிள்ளை, உருக்குமணி, இரத்தினேஸ்வரி, ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆ. க. சின்னத்தம்பு, காலஞ்சென்ற சுப்பையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராமநந்தகுமாரன் (கனடா), காலஞ்சென்ற பங்கஜம், ஜெயக்குமார், ஜெயவதனி, ஜயந்திரி, ஜயந்திரதன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு "அன்னகிரி" அளவெட்டி தெற்கில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
மு. பாலசுப்பிரமணியம்
(மகன்)

"அன்னகிரி"
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. (21761)

# ஓராண்டு நினைவஞ்சலி



இறைவன் படைப்பு: பாதகர் அழிப்பு:

26 - 02 - 79 மாலினி
21 - 10 - 81 ஜெயந்தினி
25 - 03 - 83 ஜனகன்
09 - 09 - 86 திபாகரன்

14 / 07 / 1991

ஆண்டொன்று மறைந்தாலும், இரக்கமே இல்லாத பாவிகள் வெற்றிலைக்கேணியில் செய்த கொடூரச் செயலால் எம்மை விட்டுப் பிரிந்த ஆருயிர்ச் செல்வங்களை எங்களால் மறக்கவே முடியாது. உங்கள் நாவெல்லாம் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

உங்கள் துயரால் வாடும்:
தாய், தந்தை, சகோதரன், சகோதரி.
(5150)


★ அன்பான வேண்டுகோள்!

## கொக்குவில் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி

எமது கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி, நாளை புதன்கிழமை (15-07-1992) பி. ப. 2-00 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

★ குறிப்பு: தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை;

க. வை. சிவநேசன், தலைவர்.
பொ. சந்திரநாதன், கௌரவ செயலாளர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி, பழையமாணவர் சங்கம்.

[21750]

## NEW CLASSES IN COMPUTER

★ BASIC
★ d Base III +

ஆரம்பம்: 15-07-1992

● இலகு விரிவுரைகள்
● பிரத்தியேக செய்முறை பயிற்சி
● சிறந்த விரிவுரையாளர் குழு

விபரங்களுக்கு:

North Ceylon Technical Institute
14, St. Peter's Lane
Jaffna. [சி-2921]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14 07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org